வெள்ளகோவில் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு

முன்னிலை : திரு. எஸ். வெங்கடேஷ்வரன்.,

ந.க.எண். 3077/2022/எப்1, **நாள். 16.07.2024**

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திருப்பூர் மாவட்டம் – வெள்ளகோவில் நகராட்சி மற்றும் கிராமம் – ரீ.ச.எண். சர்வே. எண். 735/B1B ல் 0.71 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநரால், தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது – உரிய தொகை செலுத்தப்பட்டதன் அடிப்படையில் இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1) திரு. அசோக்குமார், த/பெ. கண்ணையன், கதவு எண்.3/62, நாகமநாயக்கன்பட்டி, உத்தமபாளையம் கிராமம், வெள்ளகோவில் அவர்களின் இணையவழி விண்ணப்பம் நாள். 29.08.2022
2) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண். FDXIR3FX/2022/TCP, நாள். 29.10.2022
3) சார்பதிவாளர் வெள்ளகோவில் தான பத்திர ஆவண எண். 4525/2022, நாள். 12.09.2022 (சாலைகள் மற்றும் பொது உபயோகம் மற்றும் TANGEDCO)
4) அரசு ஆவண எண். 79. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3). நாள். 04.05.2017.
5) அரசு கருவூலத்தில் செலுத்திய நிலபயன்பாடு மாற்றக் கட்டணம் ரூ. 14281/–, E.சலான் எண். 20221226004174–ல், நாள். 26.12.2022
6) இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண். 159/01/01/22-23/0012745, நாள். 26.12.2022. தொகை ரூ. 42036/-.
7) இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண்.159/01/01/22-23/0012746, நாள். 26.12.2022. தொகை ரூ. 100000/-
8) இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண். 159/01/01/24-25/0006569, நாள்.05.07.2024 தொகை ரூ. 61000/-
9) இந்நகர்மன்றத் தீர்மான எண். 188/2024. நாள். 16.07.2024

****

உத்தரவு :

வெள்ளகோவில் நகராட்சி / கிராமம் எல்லைக்குட்பட்ட சர்வே. எண். 735/B1B ல் 0.71 ஏக்கர் பரப்பளவு அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க பார்வை 1–ல் காணும், திரு. அசோக்குமார், த/பெ. கண்ணையன், கதவு எண்.3/62,

நாகமநாயக்கன்பட்டி, உத்தமபாளையம் கிராமம், வெள்ளகோவில் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி கோரியது. பார்வை 2– ல் காணும் திருப்பூர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள படியும், பார்வை 3–ல் காணும் தான ஆவணங்களின் படியும் இந்நகராட்சிக்கு தானமாக சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO. 308/2022** என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகள், மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 4–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான உரிய கட்டணம் பார்வை 5–ல் கண்டுள்ள அரசு கருவூலத்தில் செலுத்திய E.சலான்–ல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பார்வை 6,7 மற்றும் பார்வை 8–ல் கண்டுள்ள பற்றுச்சீட்டின் படி தொகைகள் பெறப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புத்துறையின் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பார்வை 9–ல் இந்நகர்மன்ற தீர்மான எண். 188/2024. நாள்.16.07.2024–ல் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளதால், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

16/7/24

இணைப்பு :

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். FDXIR3FX/2022/TCP, நாள். 29.10.2022 நகல், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம்.

பெறுதல் :

திரு. அசோக்குமார்,
த/பெ. கண்ணையன்,
கதவு எண்.3/62, நாகமநாயக்கன்பட்டி,
உத்தமபாளையம் கிராமம்,
வெள்ளகோவில்

நகராட்சி அலுவலகம் திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் - 638 111

நகல் பணிந்து சமர்ப்பித்தல் :

The Chairman,
Tamilnadu Realestate Regulatory Authority,
No. 1 A, CMDA Tower-II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road, Egmore,
Chennai – 600008.